பங்கு மூலதன உதவி, சார்நிலை கடனாக

# சென்னை மெட்ரோ ரயில் திட்டத்துக்கு ரூ.3,100 கோடி நிதி ஒதுக்கீடு

■ சென்னை

நவீன பொது போக்குவரத்து வசதியை மேம்படுத்தும் வகையில் சென்னையில் மெட்ரோ ரயில் சேவை விரிவுபடுத்தப்பட்டு வருகிறது. சென்னையில் 2-ம் கட்டமாக 118.90 கிமீ தொலைவுக்கு 3 வழித்தடங்களில் மெட்ரோ ரயில் கட்டுமானப் பணிகளை விரைவில் முடிக்க அரசு முக்கியத்துவம் அளிக்கிறது.

மாதவரம் - சோழிங்கநல்லூர், மாதவரம் - கோயம்பேடு பேருந்து நிலையம் வரையிலான 52 கிமீ தொலைவு வழித்தடங்களுக்கு நிதி உதவிவழங்க ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு முகமை ஒப்புதல் அளித்துள்ளது.

விரிவான திட்ட வடிவமைப்புகள் தயாராக உள்ள நிலையில், இத்திட்டத்துக்கான கட்டுமானப் பணிகள் விரைவில் தொடங்கப்படவுள்ளன. ஆசிய வளர்ச்சி வங்கி, ஆசிய உள்கட்டமைப்பு முதலீட்டு வங்கி மற்றும் புதிய வளர்ச்சி வங்கி ஆகிய பன்னாட்டு நிதி நிறுவனங்களிடமிருந்து 2-ம் கட்டத்தில் எஞ்சியுள்ள கோயம்பேடு - சோழிங்கநல்லூர், சோழிங்கநல்லூர் - சிறுசேரி சிப்காட் மற்றும் சென்னை கலங்கரைவிளக்கம் - பூந்தமல்லி வரையிலான வழித்தடப் பகுதிகளுக்கு நிதி திரட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

சென்னை மெட்ரோ ரயில் திட்டத்தின் முதல்கட்ட திட்டத்துக்கு 50 சதவீத பங்கு மூலதனத்தை மத்திய அரசு வழங்கியது போன்று, 2-ம் கட்ட திட்டத்துக்கும் 50 சதவீத பங்கு மூலதனம் வழங்க மத்திய அரசிடம் கோரப்பட்டுள்ளது. சென்னை மெட்ரோ ரயில் திட்டத்துக்கு பங்கு மூலதன உதவி, சார்நிலைக்கடன் மற்றும் வெளிநாட்டுக் கடனை விடுவிப்பதற்காக இந்த பட்ஜெட்டில் மொத்தம் ரூ.3,100 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.